IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.65/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **சங்கரேஸ்வரி** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.02.2023

நான் தற்பொழுது முத்துசாமிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் விசாரணையிலும் இதையே சொன்னேன்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

5.6.2022ம் தேதி அதிகாலை 3.00 மணியளவில் எதிரிகள் எனக்கு சொந்தமான எனது பெயரில் உள்ள TN 67 BB 0907 Hero இருசக்கர வாகனத்தினை பெட்ரோல் ஊற்றி எரித்து சேதப்படுத்தினார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றதினால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி. – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

Calendar )
)
Miscellaneous )
) Case No. CC.65/2022
Preliminary Register )
)
Sessions )

Prosecution pw3

Deposition of witness for Defence

Court

Name : செய்யது இப்ராஹிம்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.02.2023

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறனே். கடந்த 6.6.2022ம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்த போது 11.00 மணிக்கு பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மனுரசீது எண்.114/2022 பதிவு செய்து மாண்புமிகு சாத்தூர் நீதித்துறை நடுவர் எண்.1ல் இருந்து கிடைக்கப்பெற்ற தபாலினை பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.74/2022 இதச பிரிவு 427 இதச

பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனு அ.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அசல் புகாரினையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றம் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 7.6.2022ம் தேதி 18.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் ராமர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சாட்சிகள் பாலமுருகன், சங்கரேஸ்வரி, முருகலட்சுமி, பாப்பா, காளிராஜ், முருகன், ராமர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை 4.7.2022ம் தேதி 20.00 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க நிலைய ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் சாட்சி சுந்தரமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து 24.8.2022ம் தேதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 427 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரணை செய்யாமல் ஒருதலைப்பட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.